Reg. No. : .....................................

Name : ..........................................

# FY-20

**FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, JUNE 2022**

Part – III

**TAMIL (Optional)**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் ஒன்று வீதம்**

**(8 × 1 = 8)**

1. நாட்டுப்புறவியலைக் குறிக்கும் 'Folklore' என்ற சொல்லை உருவாக்கியவர்.

   (அ) பறோ (ஆ) விளாடிமிர் பிராப்

   (இ) எமினோ (ஈ) வில்லியம் ஜான் தாமஸ்

2. "செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே"

   -எனும் பாடல் வரிகள் இடம் பெறும் சங்க இலக்கிய நூல்?

   (அ) புறநானூறு (ஆ) குறுந்தொகை

   (இ) கலித்தொகை (ஈ) அகநானூறு

3. ஒரு செயலை குறிக்கும் சொல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) பெயர்ச்சொல் (ஆ) வினைச்சொல்

(இ) உரிச்சொல் (ஈ) திசைச்சொல்

4. ஹைகூ கவிதை வடிவங்களில் ஐந்து அடிகளைக் கொண்டது?

(அ) சோகா (ஆ) செடோகா

(இ) தான்கா (ஈ) இரெங்கா

5. 'Password' – என்பதன் சரியான தமிழாக்கம்?

(அ) மின்னஞ்சல் (ஆ) இணையம்

(இ) கடவுச்சொல் (ஈ) கடன்அட்டை

6. படிமவகைகளுள் கலையியல் நோக்கில் வரும் படிம வகையின் பெயர்?

(அ) அணிப்படிமம் (ஆ) மனப்படிமம்

(இ) குறியீட்டுப்படிமம் (ஈ) இவை ஏதுமில்லை

7. கருத்து பரிமாற்றத்திற்கு மனிதன் பயன்படுத்தும் கருவி?

(அ) சொல் (ஆ) இலக்கணம்

(இ) எழுத்து (ஈ) மொழி

8. 10 முதல் 12 பேர் வரை எதிரெதிரோ நேர்திசையிலோ நின்று ஆடும் ஆட்டம்

(அ) மயிலாட்டம் (ஆ) குயிலாட்டம்

(இ) ஒயிலாட்டம் (ஈ) நங்கையார் கூத்து

9. ‘*யானை புலியைத் துதிக்கையால் எறிந்தது*’ இவ்வாக்கியத்தில் எழுவாய் எது ?

(அ) எறிந்தது (ஆ) யானை

(இ) துதிக்கையால் (ஈ) புலியை

10. நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு வடிவம் ?

(அ) புதுக்கவிதை (ஆ) நாவல்

(இ) திருக்குறள் (ஈ) வில்லுப்பாட்டு

**11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு இரண்டு வாக்கியங்களில் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் இரண்டு வீதம் (6 × 2 = 12)**

11. செம்மொழித் தகுதிப்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுங்கள்.

12. கீழ்வருவனவற்றுள் அறநூல்களை தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

பழமொழிநானூறு, மதுரைக்காஞ்சி, புறநானூறு, நான்மணிக்கடிகை.

13. புதுக்கவிதையின் இலக்கணமாக மு. மேத்தா கூறும் கருத்துக்களை எழுதுங்கள்.

14. பேச்சொலியின் தோற்றம் குறித்து சிறு குறிப்பு எழுதுங்கள்.

15. ‘நான்மணிக்கடிகை’ – சிறு குறிப்பு தருக.

16. சொல் என்பதன் இலக்கணம் யாது ?

17. ‘சோகா’ சிறுகுறிப்பு வரைக

18. போரினால் விளையும் தீமைகள் இரண்டினைக் குறிப்பிடுங்கள்.

**19 முதல் 25 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 5 வினாக்களுக்கு அரைப்பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் நான்கு வீதம். (5 × 4 = 20)**

19. ‘பச்சைவயல்’ திரைக்கதையில் இடம்பெறும் ‘தர்மு’ எனும் கதாபாத்திரத்தின் பண்புநலன்களைப் பாராட்டி எழுதுங்கள்.

20. ‘நாட்டுப்புற விளையாட்டுகளின் சிறப்புகள்’ என்ற தலைப்பில் நாளிதழ் ஒன்றில் வெளியிடுவதற்கான துண்டுபிரசுரம் தயார் செய்யுங்கள்.

21. ‘இனிமைத் தமிழ்மொழி எமது – எமக் கின்பந் தரும்படி வாய்த்தால் அமுது! கனியைப் பிழிந்திட்ட சாறு- எங்கள் கதியில் உயர்ந்திடயாம் பெற்ற பேறு’!

எனும் கவிஞர் பாரதிதாசனின்

கவிதை வரிகளை அடியொற்றி விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

22. உலகமொழி தினத்தையொட்டி தமிழ் மொழியின் சிறப்புகளை எடுத்துக் கூறி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.

23. சைபர் க்ரைமில் ஏற்றுக்கொள்ளப்படும் புகார்கள் நான்கினை எழுதுங்கள்.

24. ‘*அழிவில் அவை நீக்கி ஆறு உய்த்தழிவிண்கண்*

*அல்லல் உழப்பதாம் நட்பு*’

-இக்குறள் உணர்த்தும் பொருளைப் பெட்டிச் செய்தியாக எழுதுங்கள்

25. பொருத்துக

| | | |
|---|---|---|
| மு. மேத்தா | – | குருவிக்கு வேண்டுகோள் |
| அப்துல் ரகுமான் | – | எது புதுக்கவிதை |
| ந. பிச்சமூர்த்தி | – | மானுடம் |
| ஞானக் கூத்தன் | – | அறிவு |

**26 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 4 வினாக்களுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் ஆறுவீதம் (4 × 6 = 24)**

26. ‘நாட்டுப்புற இலக்கியங்களின் சிறப்புகள்’ எனும் தலைப்பில் பள்ளி மாத இலக்கிய மலரில் வெளியிடுவதற்கான சிறுகட்டுரை தயார் செய்யுங்கள்.

27. நயம் பாராட்டுக.

இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்

இவணும் வாரார் எவணரோ வெனப்

பெயர்புறத் தந்த பூங்கொடி முல்லைத்

தொகுமுகை யிலங்கெயி றாக

நகுமே தோழி நறுந்தண் காரரே

-குறுந்தொகை

குறிப்புகள்

*(சொல்நயம், உவமைநயம்,பொருள் நயம்)*

28. உங்கள் பள்ளி ஆண்டு விழாவில் வரவிருக்கும் கூத்துக்கலைஞர் ஒருவரிடம் நேர்காணல் நடத்த 5 வினாக்கள் கொண்ட வினாநிரல் தயார் செய்யுங்கள்.

29. 'அருளெனும் ஜாலவித்தை
செலவாணி ஆகாதய்யா
மடமையால் உலகைச் செய்தால்
அறிவினால் களைதல் தவறா'?

எனும் கவிதை வரிகளில் கவிஞர் நா. பிச்சமூர்த்தி கூறும் அறிவியல் வளர்ச்சியின் இன்றியமையாமையைக் குறித்து விமர்சனக் கட்டுரை எழுதுங்கள்.

30. உங்கள் பள்ளி இலக்கிய மன்றம் சார்பாக நடைபெறவிருக்கும் பட்டிமன்றத்தில் நகரமயமாதலினால் விளைவது நன்மையா! தீமையா! ஏதேனும் ஓர் அணியில் பேசுவதற்கான பட்டிமன்றக் குறிப்புகள் தயார் செய்யுங்கள்

31. உலக இணைய நாளையொட்டி உங்கள் பள்ளியில் சொற்பொழிவாற்ற "இணையதள பயன்பாடும் பாதுகாப்பும்" என்ற தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.

32. தமிழ் மொழியின் 'செம்மொழித் தகுதிப்பாடுகள்' என்ற தலைப்பில் வானொலி உரை தயார் செய்யுங்கள்.

**33 முதல் 35 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 2 வினாக்களுக்கு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் எட்டு வீதம்** **$(2 \times 8 = 16)$**

33. நாட்டுப்புறவியல் நாளன்று உங்கள் பகுதி தமிழ்ச்சங்கத்தில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கத்தில் பங்கேற்க 'பழமொழிகள் காட்டும் நகைச்சுவை' என்ற தலைப்பில் கருத்தரங்க கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள்

- பழமொழி அறிமுகம்
- நகைச்சுவை பழமொழிகள்
- வாழ்க்கையில் நகைச்சுவையின் தேவை
- நகைச்சுவையின் நன்மைகள்

34. உங்கள் பள்ளியில் நடைபெறும் சைபர் க்ரைம் முகாமில் பங்கேற்கும் நீங்கள் விழிப்புணர்வூட்டும் வகையில் "இணையக் குற்றங்களும் மாணவர்களும்" எனும் தலைப்பில் கருத்துரைச் செய்வதற்காக கட்டுரை ஒன்றை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள்

வளைதளம், விளம்பரங்கள், பணமோசடி, க்ரைம்.

35. சுற்றுச்சூழல் தினவிழாவை முன்னிட்டு பள்ளியில் நடைபெறவிருக்கும் கட்டுரைப் போட்டியில் பங்கேற்க 'இயற்கை நலனே மனித நலன்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள்

- இயற்கையைப் பாதுகாத்தல்,
- மரம் நட்டு வளர்த்தல்,
- இயற்கை உரங்களை பயன்படுத்தல்
- உயிரனங்களைப் பாதுகாத்தல்.

---